# சிங்கப்பூர் தேசத்திற்காக திறப்பிலே நில்லுங்கள்!




## இயேசு கிறிஸ்துவோடு ஒரு மணி நேரம்!

"ஒரு மணி நேரமாவது என்னோடே
(இயேசு கிறிஸ்துவோடே) கூட விழித்திருக்க கூடாதா?"
மத்தேயு 26:40.

# உங்கள்
# சகோதரனிடமிருந்து...



**கி**றிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில், உங்களுக்கு என் அன்பின் நல் வாழ்த்துக்கள்!

சிங்கப்பூர் தேசத்தின் ஆசீர்வாதத்திற்காக, அங்குள்ள திருச்சபைகளின் எழுப்புதலுக்காக ஜெபித்து வருகிற உங்களுக்காக, கர்த்தரைத் துதிக்கிறேன்!

ஜெபத்தில் **சோர்ந்து போகாதீர்கள்! தொடர்ந்து ஜெபியுங்கள்!**

உங்கள் ஜெப வேளைகளில் நீங்கள் பயன்படுத்துவதற்காக, இந்த **ஜெபக் கையேடு** ஒன்றை தயாரித்திருக்கிறோம். இந்த ஜெபக் கையேட்டில் கொடுக்கப்பட்டுள்ள ஜெபக் குறிப்புகளைப் பயன்படுத்தி, **தினந்தோறும் ஜெபியுங்கள்.**

**அனுதினமும் அதிகாலை 5:00 - 6:00 மணி வரையுள்ள உங்கள் தனி ஜெப வேளையை தவற விடாதீர்கள். வாரத்தில் ஒருநாள் குழுவாகக் கூடி**, இந்த ஜெபக் குறிப்புகளைப் பயன்படுத்தி **ஜெபியுங்கள்.** உங்கள் ஜெபமே, சிங்கப்பூர் தேசத்தில் ஆசீர்வாதத்தையும், பாதுகாப்பையும் கொண்டு வரும்.

உங்களுக்காக **நானும், 'இயேசு விடுவிக்கிறார்' குழுவினரும் ஜெபிக்கிறோம்.** எங்களுக்காக **நீங்களும் வேண்டிக் கொள்ளுங்கள்.**

கிருபை உங்களோடிருப்பதாக!

உங்கள் சகோதரன்,

Mohan C L.



# அதிகாலையில் ஆண்டவரோடு!

## ஒருமணி நேரம் ஜெபிப்பது எப்படி?



**15 நிமிடங்கள்!**

ஒரு சில பாடல்களைப் பாடி, கர்த்தரை **துதியுங்கள்!**

**பிதாவாகிய தேவன்!**

**கர்த்தருடைய நாமங்களையும், அவர் செய்த அதிசயங்களையும் சொல்லி, அவரை துதியுங்கள்!**

**குமாரனாகிய கிறிஸ்து!**

**இயேசு கிறிஸ்துவின் நாமங்களைச் சொல்லி, அவர் செய்து வருகிற அதிசயங்களைச் சொல்லி, அவரை துதியுங்கள்.**

**பரிசுத்த ஆவியானவர்!**

**ஆவியானவருடைய நாமங்களையும், அவருடைய கிரியைகளையும் சொல்லி, அவரை துதியுங்கள்!**

**திரியேக தேவனாகிய கர்த்தர் உங்கள் வாழ்க்கையில் செய்த எண்ணி முடியாத நன்மைகளை நினைத்து, அவரை துதியுங்கள்!**

**15 நிமிடங்கள்!**

பரிசுத்த வேதாகமத்தை வாசித்து, வேத வசனத்தை **தியானியுங்கள்!**

முழங்காலில் நின்று வேதாகமத்தை வாசித்து, தியானித்து, கர்த்தர் உங்களாடு பேசுகிற வேத வசனத்திற்குக் கீழ்படிய உங்களை **அர்ப்பணித்து ஜெபியுங்கள்**.

வாக்குத்தத்தங்களை சுதந்தரித்து **ஜெபியுங்கள்**.

முடிந்தால், **தினமும் ஒரு வேத வசனத்தையாவது மனப்பாடம் செய்து கொள்ளுங்கள்**.

**20 நிமிடங்கள்!**

சிங்கப்பூர் தேசத்திற்கான ஜெபக் குறிப்புகளை, தேவ சமூகத்தில் நினைவு கூர்ந்து **ஜெபியுங்கள்.**

**10 நிமிடங்கள்!**

உங்கள் தனிப்பட்ட மற்றும் குடும்பக் காரியங்களை கர்த்தருக்குத் தெரியப்படுத்தி **ஜெபியுங்கள்.**

உங்கள் ஜெபம் கேட்கப்பட்டதற்காக, கர்த்தருக்கு மகிமை செலுத்துங்கள்!

# சிங்கப்பூர் – சில விபரங்கள்

(Singapore - some Informations)

| | | |
|---|---|---|
| TOTAL POPULATION | - | Nearly 5.9 MILLION (59 Lakhs). |
| SINGAPOREANS | - | Nearly 37 Lakhs. |
| Permanent Residents | - | Nearly 6 Lakhs. |
| Non Residents | - | Nearly 16 Lakhs. |

## PEOPLE GROUPS!

CHINESE - 74.2%
MALAY - 13.3%
INDIANS - 9.2%
OTHERS - 3.3%

## RELIGION!

| | |
|---|---|
| CHRISTIANS (Govt. கணக்குப்படி 18.8%) | - 35% |
| BUDDISM | - 33% |
| ISLAM | - 15% |
| TAOISM | - 11% |
| HINDUS | - 5% |
| OTHERS | - 1% |

## INDIANS!

| | |
|---|---|
| Population | - Nearly 5 Lakhs. |
| Hindus | - 55.4% |
| Islam | - 25.6% |
| Christians | - 12.1% (சுமார் 60,000) |
| Others | - 6.9% |



- இந்த தேசத்தில், சுமார் **550க்கும் அதிகமான திருச்சபைகள்** இருக்கின்றன!
- சுமார் 112க்கும் அதிகமான இந்தியத் திருச்சபைகள் (தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் etc...) இருக்கின்றன.
- சுமார் **60,000**க்கும் அதிகமான இந்தியக் கிறிஸ்தவர்கள் கர்த்தரை ஆராதிக்கிறார்கள்!



# ஸ்தோத்திர ஜெபம்!

- சிங்கப்பூர் தேசத்தை கர்த்தர் அதிகமாக நேசிக்கிறதற்காக, அந்த தேசத்திலுள்ள எல்லா மக்களுக்காகவும் அவருடைய பரிசுத்தமுள்ள இரத்தம் சிந்தப்பட்டதற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரியுங்கள்!**

- சிங்கப்பூர் மக்களை நேசித்து, கர்த்தர் அனுப்பிய எல்லா மிஷனெரிகளுக்காக, அவர்கள் மூலமாக ஸ்தாபிக்கப்பட்ட திருச்சபைகளுக்காக, இன்றைக்கு சிங்கப்பூரில் சுமார் 550க்கும் மேலான திருச்சபைகள் ஸ்தாபிக்கப்பட்டதற்காக, கர்த்தரை **ஸ்தோத்தரியுங்கள்!**

- இன்றைக்கு தேவ பிள்ளைகள் உபவாசித்து ஜெபிப்பதின் விளைவாக, திருச்சபைகளில் ஜெப ஆவி ஊற்றப்பட்டு வருகிறது! சீனத் திருச்சபைகள் வேகமாக வளர்ந்து வருகிறது! சீனத் திருச்சபையைச் சேர்ந்த வாலிபர்கள் மத்தியில் எழுப்புதல் ஏற்பட்டு வருகிறதற்காக, அனேக இந்தியர்கள் இரட்சிக்கப்பட்டு, திருச்சபையில் சேர்க்கப்படுகிறதற்காக கர்த்தரை **துதியுங்கள்!**

- தேவ பிள்ளைகளின் ஜெபத்தின் விளைவாக, ‘உலகிலேயே குற்றங்கள் குறைந்த தேசம்!’ ‘உலகிலேயே ஆரோக்கியமான மக்கள் வசிப்பதில் முதலிடம்!’, ‘மிகக் குறைந்த ஊழல் உள்ள தேசம்!’ என்கிற பெருமையை சிங்கப்பூர் தேசம் பெற்றுள்ளது. அதற்காக கர்த்தரை **துதியுங்கள்!**

- சிங்கப்பூர் தேசம் சீரான வளர்ச்சியைப் பெற்று, பொருளாதார வளர்ச்சியில், **உலகிலேயே 2வது இடத்தைப்** பெற்றுள்ளது! அதற்காக கர்த்தரை **துதியுங்கள்!**

- இம்மட்டும் இந்த தேசத்தை கர்த்தர் பாதுகாத்து வருகிறதற்க்காக அவரை **துதியுங்கள்.**

# எழுப்புதலுக்காக ஜெபியுங்கள்!



- எழுப்புதலுக்கு முன்பாக, **திருச்சபைகளில் சுத்திகரிப்பு அவசியமாக இருக்கிறது**. கிறிஸ்தவர்களினிடத்தில் காணப்படுகிற 'பெருமை!', 'சுயநலம்!', 'நிர்விசாரம்!', 'சாட்சியில்லாத வாழ்க்கை!', 'பிரிவினைகள்!', 'ஜெபிக்காத பாவம்!', 'பாரம்பரியம்!' போன்றவைகளை மன்னித்து, **திருச்சபைகளை கர்த்தர் சுத்திகரிக்க ஜெபியுங்கள்.**

- தேவ ஊழியர்களுக்காக **ஜெபியுங்கள்.** அவர்கள் மீது எழுப்புதல் அக்கினி ஊற்றப்பட, ஆதி அப்போஸ்தலர்களைப் போல பரிசுத்தத்தோடு, வல்லமை–வரங்களோடு ஊழியம் செய்கிறவர்களாக விளங்க **ஜெபியுங்கள்.**

- தேவ ஊழியர்களின் நல்ல சரீர சுக பெலனுக்காக, பாதுகாப்பிற்காக, அவர்களுடைய குடும்பங்களின் பாதுகாப்பிற்காக, பிள்ளைகள் எந்த விதமான சாத்தானின் கண்ணிகளிலும் சிக்கி விடாதபடி பாதுகாக்கப்பட, அவர்களுக்கு விரோதமாக உருவாக்கப்படும் எந்த ஆயுதங்களும் வாய்க்காமல் போக **ஜெபியுங்கள்.**

- திருச்சபைகளில் இன்னும் அதிகமான ஜெப ஆவி ஊற்றப்பட, தேவ ஊழியர்கள், விசுவாசிகள், வாலிபர்கள், சிறு பிள்ளைகள் எல்லோர் மீதும் மன்றாட்டின் ஆவி ஊற்றப்பட, ஆத்தும பாரத்தால் நிரப்பப்பட **ஜெபியுங்கள்.**

- பெந்தெகொஸ்தே நாளில் நடந்ததைப்போல, எல்லாத் திருச்சபைகளிலும் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் அக்கினியாய்

கடந்து வர, வல்லமை–வரங்கள் மற்றும் தீர்க்கதரிசன அபிஷேகத்தினால் தேவ ஜனங்கள் நிரப்பப்பட்டு, கர்த்தருக்கென்று ஊழியம் செய்கிறவர்களாக மாற **ஜெபியுங்கள்.**

- இப்பொழுது இருக்கிறதைப் பார்க்கிலும், திருச்சபைகள் ஆயிரம் மடங்கு வளர்ந்து பெருக, இரட்சிக்கப்படுகிறவர்கள் அனுதினமும் திருச்சபைகளில் சேர்க்கப்பட **ஜெபியுங்கள்.**

- திருச்சபைகள் ஆசீர்வதிக்கப்பட, எல்லா திருச்சபைகளுக்கும் சொந்த கட்டிடங்கள், வாகன வசதிகள், ஊழியத்திற்குத் தேவையான எல்லா வசதிகளும் சந்திக்கப்பட **ஜெபியுங்கள்.**

- இந்த தேசத்திலுள்ள தேவ பிள்ளைகள் அனைவரும், 'யோசேப்பு', 'நெகேமியா', 'தானியேல்' மற்றும் 'எஸ்தர்' போன்றவர்களைப் போல எல்லா நிலையிலும் உயர்த்தப்பட்டு, தேசத்தில் மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருந்து கொண்டு, கர்த்தருக்கு மகிமையைக் கொண்டு வருகிறவர்களாக விளங்க, "தேவ ஜனங்களின் மூலமாகத்தான் தேசம் ஆசீர்வதிக்கப்படுகிறது!' என்பதை எல்லோரும் அறிந்து கொள்ள **ஜெபியுங்கள்.**



# மன்றாடி ஜெபியுங்கள்!



- இந்த தேசத்து மக்கள், தங்கள் அறியாமையினால் செய்கிற, 'சிலை வணக்கம்', 'மனித வழிபாடு', 'மந்திரம்', 'பில்லி–சூனியம்', 'இச்சைகள்', 'போதை பழக்கங்கள்' போன்ற பாவங்களை கர்த்தர் மன்னிக்கும்படியாக **மன்றாடுங்கள்.**

- இந்த தேசத்தின் மக்கள் தொகையில், பெரும்பான்மையாக இருக்கிற சீன மக்கள் (74.2%) அனைவரும் இரட்சிக்கப்பட, தங்களுடைய தவறான வழிபாடுகள் மற்றும் நம்பிக்கையிலிருந்து அவர்கள் விடுதலை பெற **ஜெபியுங்கள்.**

- இந்த தேசத்தில் இருக்கிற இந்திய மக்கள் (9.2%) அனைவரும் இரட்சிக்கப்பட, தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் இந்தி மொழி பேசுகிற மக்கள் அனைவரும் இரட்சிக்கப்பட, தங்கள் பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து அவர்கள் விடுதலை பெற மன்றாடி **ஜெபியுங்கள்.**

- இந்த தேசத்தில் இருக்கிற மலாய் மக்கள் (13.3%) இரட்சிக்கப்பட, தங்களுக்குள் காணப்படுகிற தவறான நம்பிக்கையிலிருந்து அவர்கள் விடுதலை பெற **ஜெபியுங்கள்.**



- இந்தியா, பிலிப்பைன்ஸ், இந்தோனேசியா, பங்களாதேஷ், ஐரோப்பா போன்ற வெளி நாடுகளிலிருந்து இந்த தேசத்திற்கு வேலைக்காக வந்திருக்கிற லட்சக்கணக்கான தொழிலாளர்கள்,

தங்கள் பாவப் பழக்க வழக்கங்களிலிருந்து விடுதலை பெற்று இரட்சிக்கப்பட **ஜெபியுங்கள்.**

- இந்த தேசத்திலுள்ள அனைத்து வாலிபர்கள் மற்றும் சிறு பிள்ளைகள், தவறான தொடர்புகள், இன்டெர்நெட் மூலமாகச் செய்கிற பாவங்கள், பெற்றோருக்குக் கீழ்படியாத பாவங்கள், மன அழுத்தம் போன்றவைகளிலிருந்து விடுதலை பெற்று, இரட்சிப்பைப் பெற்றுக் கொள்ள **ஜெபியுங்கள்.**



- அரசியல் தலைவர்கள், அதிகாரிகள், பெரும் தொழிலதிபர்கள் இரட்சிக்கப்பட்டு, கர்த்தருக்கு சாட்சியாக வாழ **ஜெபியுங்கள்.**



# போராட்ட ஜெபம்!



- தேவ பிள்ளைகளுக்கும், எழுப்புதலுக்கும் விரோதமாகக் கிரியை செய்கிற ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.** நிர்விசாரம், உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பது, ஐக்கியத்தைக் கெடுப்பது, ஜெபிக்க விடாமல், ஊழியம் செய்ய விடாமல் தடுப்பது போன்ற செயல்களைத் தூண்டுகிற அசுத்தக் கிரியைகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

- குடும்ப சமாதானத்தைக் கெடுக்கிற ஆவிகள், கணவன்–மனைவி, பெற்றோர் –பிள்ளைகளுக்கிடையே உள்ள உறவுகளைக் கெடுக்கிற ஆவிகள் கட்டப்பட, விவாக ரத்துக்கள் மற்றும் திருமணம் செய்யாமலேயே 'சேர்ந்து' வாழும் கலாச்சாரத்தைத் தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.**





- வாலிபர்களுக்குள்ளே தங்களுடைய எதிர்காலத்தைக் குறித்த பயத்தையும், தற்கொலை எண்ணத்தையும், மன அழுத்தத்தையும் (Depression), தவறான Video Gamesகளைப் பார்க்கத் தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.** வாலிபர்களை

விபத்துகளில் சிக்க வைத்து, இரத்தம் குடிக்கத் துடிக்கிற ஆவிகள் கட்டப்பட **ஜெபியுங்கள்.**

- பாவங்களைத் தூண்டுகிற ஆவிகள் கட்டப்பட வேண்டும். குடி வெறி, போதைகள், இச்சைகள் மற்றும் சூதாட்டங்களைத் தூண்டுகிற ஆவிகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.**

- 'மந்திரம்!', 'பில்லி–சூனியம்', 'பக்தி!' என்கிற பெயரால் தவறான நம்பிக்கைகளைத் தூண்டுகிற ஆவிகள், மனிதர்களை தெய்வமாக்குகிற அசுத்தக் கிரியைகள் அழிக்கப்பட **ஜெபியுங்கள்.**

- வலு சர்ப்பத்தின் கிரியைகள் முற்றிலும் அழிக்கப்பட வேண்டும். வான மண்டலப் பொல்லாத ஆவிகளின் சேனைகள் துரத்தப்பட வேண்டும். போராடி **ஜெபியுங்கள்.**



# பாதுகாப்பிற்காக ஜெபியுங்கள்!



- இயற்கைச் சீற்றங்களால் தேசம் பாதிக்கப்படாமலிருக்க, சுனாமி, நில நடுக்கம், புகை மூட்டம், கொள்ளை நோய் போன்ற பேராபத்துக்கள் வராமலிருக்க **ஜெபியுங்கள்.**

- அண்டை நாடுகள் மூலமாக எந்தப் பிரச்சனையும் வரக் கூடாது. தீவிரவாதிகள் எந்த வழியாகவும் இந்த தேசத்திற்குள் நுழையக் கூடாது. கடல் வழியாக, துறைமுகங்கள் வழியாக எந்த ஆபத்துகளும் வராமலிருக்க **ஜெபியுங்கள்.** ஆகாய மார்க்கமாக எந்த ஆபத்தும் வராமலிருக்க **ஜெபியுங்கள்.**

- உயரமான கட்டிடங்களில் வேலை செய்கிற மக்கள் பாதுகாக்கப்பட, கட்டுமானப் பணிகள், கப்பல் மற்றும் துறைமுகங்களில் வேலை செய்கிற மக்களுக்கு எந்த விதமான ஆபத்தும் வராமலிருக்க, சாலை விபத்துகளால் மரணங்கள் ஏற்படாமலிருக்க **ஜெபியுங்கள்.**



- இந்த தேசத்தில், சுமார் 1,60,000 வீட்டுப் பணியாளர்கள் வேலை செய்கிறார்கள். அவர்கள் உடல் ரீதியாக, பாலியல் ரீதியாக துன்புறுத்தப்படக் கூடாது. சரியான நேரங்களில் அவர்களுக்கு சம்பளம் வழங்கப்பட வேண்டும். ஏழை மக்கள் ஏமாற்றப் படக் கூடாது. இந்தக் காரியங்களுக்காக பாரத்தோடு **ஜெபியுங்கள்.**

- முதியோர் (**Elderly People**) அதிகமாகப் புறக்கணிக்கப்படுகிறார்கள், அவர்களில் **Chinese** மற்றும் இந்திய சமுதாயத்தினர் அதிகம். அவர்கள் தங்கள் கடைசி நாட்களை கவலை, கண்ணீரில்லாமல், சந்தோஷத்தோடு கழிக்க வேண்டும். அவர்கள் சமாதானத்தோடு மறுமைக்குள் பிரவேசிக்க **ஜெபியுங்கள்.**



- தேசத்தின் இராணுவம் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்காக **ஜெபியுங்கள்.** கர்த்தர் அவர்களுக்கு விசேஷித்த ஞானத்தை அருளி, இந்த தேசத்தைப் பாதுகாக்கத் தக்கதான கிருபைகளைக் கொடுக்க **ஜெபியுங்கள்.**



# ஆசீர்வாதத்திற்காக ஜெபியுங்கள்!



- இந்த தேசத்தின் பொருளாதாரம் இன்னும் ஆசீர்வதிக்கப்பட, நடுத்தரக் குடும்பங்கள் ஆசீர்வதிக்கப்பட, கடன் பிரச்சனை இல்லாத வாழ்க்கை வாழ, கர்த்தர் இவர்களை ஆசீர்வதிக்க **ஜெபியுங்கள்.**

- வருங்கால சந்ததி ஆசீர்வதிக்கப்பட வேண்டும். School, College, Universityகளில் கர்த்தருடைய பிரசன்னம் இறங்க, பிள்ளைகள் தேவ ஞானத்தால் நிரப்பப்பட்டு, தேசத்திற்கு ஆசீர்வாதமாக விளங்க **ஜெபியுங்கள்.**


- தேசத்தின் President, Prime Minister, Ministers, M.P.,க்கள் (94 பேர் (84 Elected, 10 Nominated)) ஆசீர்வதிக்கப்பட, அவர்கள் மூலமாக நன்மையான காரியங்கள் தேசத்தில் நடைபெற **ஜெபியுங்கள்.**



- தேசத்தில் தொழில் வளம் பெருக, எல்லோருக்கும் வேலை வாய்ப்பு உண்டாக, Touristகள் அதிகம் வர வேண்டும் என்பதற்காக, பாவ வழிகளை உற்சாகப்படுத்தி, அதன் மூலமாக வருமானம் பெருகக் கூடாது. கர்த்தரின் ஆசீர்வாதம் தேசத்திற்கு ஐசுவரியத்தைக் கொடுக்க **ஜெபியுங்கள்.**

- நீதித் துறை, கல்வித் துறை, Finance Department, Police Department மற்றும் எல்லாத் துறைகளையும் சார்ந்த அதிகாரிகளும் ஆசீர்வதிக்கப்பட **ஜெபியுங்கள்.**

# இயேசுவே, எங்கள் சிங்கப்பூரை ஆசீர்வதியும்!




*Jesus, Bless our Singapore*

சிங்கப்பூரில்

**இயேசு விடுவிக்கிறார்**



# திறப்பின் வாசல் ஜெபம்!

**ஒவ்வொரு மாதமும் 3வது சனிக்கிழமை தோறும்.**

**நேரம்: 1:00 P.M. to 4:00 P.M.**

**இடம்: Parish of Christ Church,**
**No 1, Dorset Rd, Singapore 219486,**
**(Opp. to KK Hospital)**

**Contact: Bro. Samuel Sathianathan - 9735 7763, Bro. Julius - 8125 7634,**
**Bro. Barnabas - 9027 2341.**

Jesus Redeems MINISTRIES

JESUS REDEEMS MINISTRIES

Nalumavadi - 628211, Thoothukudi Dist., Tamilnadu, India.
Phone: +91 4639-220022 Email: info@jesusredeems.org

